මැතිවරණ කොමිෂන් සභාව
தேர்தல் ஆணைக்குழு
Election Commission
මැතිවරණ මහලේකම් කාර්යාලය, නො.02 සරණ මාවත, රාජගිරිය, ශ්‍රී ලංකාව
தேர்தல்கள் செயலகம், இல.02 சரண மாவத்தை, இராஜகிரிய, இலங்கை
Elections Secretariat, No.02 Sarana Mawatha, Rajagiriya, Sri Lanka

මාධ්‍ය නිවේදනය
ஊடக அறிவித்தல்
MEDIA RELEASE

**ஊடக அறிவித்தல் இல :PE/2024/16** **2024.10.09**

# பாராளுமன்றத் தேர்தல் - 2024 நவம்பர் 14 அஞ்சல் மூலம் வாக்களிக்கவுள்ள வாக்காளர்களுக்கான விசேட அறிவித்தல்

2024 பாராளுமன்றத் தேர்தலில் அஞ்சல் மூலம் வாக்களிப்பதற்கான விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் நடவடிக்கை 2024.10.10 ஆம் திகதி நள்ளிரவு 12.00 மணியுடன் நிறைவடையவுள்ளது.

தேர்தல் கடமைகளிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ள அலுவலர்கள் தவிர்ந்த அரசாங்க சேவையில் மற்றும் மாகாண அரசாங்க சேவையிலுள்ள ஏனைய அனைத்து அலுவலர்களும் அஞ்சல் மூலம் வாக்களிப்பதற்கு விண்ணப்பித்தல் வேண்டுமென்பதோடு, அஞ்சல் மூலம் வாக்களிப்பதற்கு விண்ணப்பிக்காமை மற்றும் குறைபாடுகளுடன் கூடிய விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படுகின்றமை போன்ற விடயங்கள் தேர்தல் கடமைகளிலிருந்து விடுவிப்பதற்கான காரணங்கள் அல்ல. எனவே, தகைமைப்பெற்றுள்ள அனைத்து அஞ்சல் வாக்காளர்களினதும் விண்ணப்பங்கள் 2024.10.10 ஆம் திகதி நள்ளிரவு 12.00 மணிக்கு முன்னர் தனது அண்மைய மாவட்ட தேர்தல் அலுவலகத்திற்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டுமென்பதை அறியத்தருகின்றேன்.

தேர்தல் கடமைகளுக்கு அறிக்கையிடுமாறு நியமனக் கடிதங்கள் வழங்கப்படும் அனைத்து அலுவலர்களும் தேர்தல் கடமைகளுக்கு அறிக்கையிட வேண்டுமென்பதோடு, தேர்தல் கடமையின் இறுதியில் தனது நிரந்தர சேவை நிலையத்திற்கு அறிக்கையிட்ட பின்னர் வரவுச் சான்றிதழை நிறுவனத் தலைவரிடம் சமர்ப்பித்தல் வேண்டும்.

தேர்தல் கடமைகளுக்கு அறிக்கையிடாத அலுவலர்கள் / ஊழியர்கள் அரசியலமைப்பின் 104 எஎ. உறுப்புரையின் கீழ் தேர்தல் ஆணைக்குழுவுடன் ஒருங்கிணைவதற்கு நியாயமான காரணமின்றி மறுக்கின்ற அல்லது தவறுகின்ற ஆட்களாக கருதப்படுவர். இவ்வாறு செயற்படுவதானது, ஒரு இலட்சம் ரூபா குற்றப்பணம் அல்லது மூன்று ஆண்டுகள் வரை மறியற்தண்டனை விதிக்கப்பட முடியுமான ஒரு குற்றம் என்பதையும் குறிப்பிட விரும்புகின்றேன்.

**சமன் ஸ்ரீ ரத்நாயக்க**
**தேர்தல்கள் ஆணையாளர் நாயகம்**